DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 1/2018**

Deposition of witness for Prosecution அ.சா.5

Name : சண்முகவேல்
Father/ Husband Name : ஆறுமுகம்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 23.09.2025.

**<u>முதல்விசாரணை:-</u>** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது தேவகோட்டையில் குடியிருந்து ஓட்டுநராக வேலை பார்க்கிறேன். எதிரிகளை தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காண்பிக்கப்படும் 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.ஆ. 6 ஆகவும் மற்றும் 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.ஆ. 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காண்பிக்கப்படும் 1 வது எதிரியிடமிருந்து கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** **(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. கடந்த 10.11.2016-ம் தேதி ஆறாவயல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த போது கடந்த 16.10.2016-ம் தேதி அதிகாலை சுமார் 01.00 மணிக்கு 1,2 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக

இருந்து கையெழுத்து செய்தும், ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதியளிக்கப்பட்ட பகுதியின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட பொருட்களில் கைப்பற்றுதல் மகஜரில் 2வதாக சாட்சி கையெழுத்து செய்துவிட்டு பின்னிட்டு விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை.**

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.